


**15. 05. 2026**

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திரமோடி ஐக்கிய அரபு அமீரகத்தலைவர் திரு. ஷேக் முகமது பின் சையத்துடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டார்.

2. நீட் தேர்வு அடுத்த ஆண்டு முதல், ஆன்லைன் வாயிலாக நடத்தப்படும் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

3. குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணையை அடுத்த மாதம் 12ஆம் தேதி திறப்பது குறித்து முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் நீர்வளத்துறை அதிகாரிகளுடன் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

4. சட்ட விரோதமாக விற்பனை செய்யப்படும் போதை பொருட்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு. நிர்மல் குமார் கூறியுள்ளார்.

5. ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் – லக்னோ சூப்பர் ஜெயன்ஸை இன்று எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

************

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி தமது  ஐந்து நாடுகள் பயணத்தின் முதற்கட்டமாக இன்று  ஐக்கிய அரபு அமீரகம் சென்றடைந்தார்.

தலைநகர் அபுதாபியில் அந்நாட்டின் பாரம்பரியத்தின்படி பிரதமருக்கு மிக சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதன் ஒருபகுதியாக ஐக்கிய அரபு அமீரகத்தின் நவீன ஜெட் விமானம் அமீரக வான்வெளியில் பிரதமரை கவுரவிக்கும் வகையில் அவரை வரவேற்றது.

பின்னர் ஐக்கிய அரபு அமீரக தலைவர் திரு. ஷேக் முகமது பின் சையத்துடன் பிரதமர் மேற்கொண்ட பேச்சுவார்த்தையின்போது தம்மை வான்வெளியில் அந்நாட்டு விமான படையின் விமானங்கள் வரவேற்றதற்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

இந்நடவடிக்கை இந்திய மக்களுக்கு ஐக்கிய அரபு அமீரகம் வழங்கும் கவுரவமாகும்என்று பிரதமர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

அண்மையில் இந்தியாவில் இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஐக்கிய அரபு அமீரகம் இரங்கல் தெரிவித்ததற்கு பிரதமர் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

ஐக்கிய அரபு அமீரகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவிப்பதாக கூறிய பிரதமர், இந்த தாக்குதல் ஏற்றுக்கொள்ள முடியாதது என்றார்.

இக்கடினமான தருணத்தில் ஐக்கிய அரபின் பொறுமையையும் துணிச்சலையும் உறுதியையும் பிரதமர் பாராட்டினார்.

அபுதாபி பயணத்தை தொடர்ந்து பிரதமர் நெதர்லாந்து, ஸ்வீடன், நார்வே, இத்தாலி நாடுகளுக்கும் பயணம் மேற்கொள்கிறார்.

************

தர்மேந்திர பிரதான்

நீட் தேர்வு அடுத்த ஆண்டு முதல் ஆன்லைன் வாயிலாக நடத்தப்படும் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு.தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், எதிர்காலங்களில் நீட் நுழைவுதேர்வு கட்டமைப்பு முறை வலுப்படுத்தப்படும் என்றார்.

MBBS., BDS., உள்ளிட்ட இளநிலை மருத்துவ படிப்பு நீட் நுழைவு மறுதேர்வு அடுத்த மாதம் 21ஆம் தேதி நடைபெறும் என்று தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இத்தேர்விற்கான தேர்வு கூட நுழைவு சீட்டு அடுத்த மாதம் 14ஆம் தேதிக்குள் மாணாக்கருக்கு வழங்கப்படும் என்றார்.

நாட்டில் உள்ள மாணவ மாணவிகளின் நலனே மத்திய அரசின் உயர் முன்னுரிமை என்றார்.

கல்வி முறைகேடுகளிலும், சதி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ள மோசடி கும்பலின் நடவடிக்கையால் தகுதியுடைய மாணாக்கர் பாதிக்கப்படக்கூடாது என்பதில் அரசு உறுதியாக உள்ளதாகவும் திரு.தர்மேந்திர பிரதான் எடுத்துரைத்தார்.

கடந்த 3ஆம் தேதி நடைபெற்ற நீட் நுழைவு தேர்வில் ராஜஸ்தானில் வினாத்தாள் கசிந்ததாக எழுந்த புகாரை அடுத்து அத்தேர்வு ரத்து செய்யப்பட்ட நிலையில் மறு தேதி அறிவிக்கப்பட்டுள்ளது.

************

பெட்ரோல் டீசல்

மேற்காசிய நெருக்கடியின் மத்தியில் உலக நாடுகளில் பெட்ரோலிய எரிபொருட்களின் விலை அதிகரித்த நிலையிலும், விலையை உயர்த்தாமல் இந்தியா தனித்துவ நாடாக திகழ்ந்ததாக மத்திய அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார்.

சர்வதேச நாடுகள் 20 சதவிகிதம் முதல், 100 சதவிகிதம் வரை பெட்ரோலி டீசல் விலையை உயர்த்திய நிலையில், இந்தியா பெட்ரோலின் விலையை 3.2 சதவிகிதமாகவும்,

டீசலை 3.4 சதவிகிதமாகவும் மட்டுமே உயர்த்தியுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கச்சா எண்ணெய் விலை பீப்பாய் ஒன்றுக்கு 100 டாலரையும் தாண்டி உலக சந்தைகளை ஸ்தம்பிக்க வைத்த நிலையில், இந்தியாவின் எண்ணெய் நிறுவனங்கள் நஷ்டத்தை ஏற்று பல வாரங்களாக பொதுமக்களை பணவீகத்திலிருந்தும்,

பொருளாதார நெருக்கடியிலிருந்தும் பாதுகாத்ததாக அமைச்சர் எடுத்துரைத்தார்.

இந்நடவடிக்கை மத்திய அரசின் பொறுப்பு மிகு ஆட்சியையும், மக்கள் நலனே பிரதானம் என்ற தலைமைத்துவத்தையும் புலப்படுத்துவதாக குறிப்பிட்டார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான அரசு பொருளாதார ஸ்திரத்தன்மையையும் மக்களின் நலனையும் சமநிலையில் முன்னெடுத்து செல்லும் நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டுள்ளதாக திரு.கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

முன்னதாக பெட்ரோல் விலை லிட்டருக்கு 3 ரூபாய் 14 காசுகளும்,

டீசல் விலை 3 ரூபாய் 11 காசுகளாகவும் உயர்த்தப்பட்டுள்ளதாக எண்ணெய் நிறுவனங்கள் அறிவித்துள்ளது.

************

சிவகுமார்

நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்காக முறையான தேசிய கொள்கைகளை மத்திய அரசு வகுக்க வேண்டும் என்று கர்நாடக மாநில துணை முதலமைச்சர் திரு.சிவகுமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் வெளியுறவு கொள்கையில்

ஏற்பட்ட தோல்வியே பெட்ரோல் டீசல் விலை உயர்விற்கு காரணம் என்று குறை கூறினார்.

அதிகரித்து வரும் தங்கத்தின் விலை, ஏழை எளிய மக்களை பெரிதும் பாதிப்பதாகவும் குறிப்பிட்டார்.

************

முதலமைச்சர்

குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணையை அடுத்த மாதம் 12ஆம் தேதி திறப்பது தொடர்பாக முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய் இன்று வேளாண் மற்றும் நீர்வளத்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்ற இந்த ஆலோசனை கூட்டத்தில் காவிரி நீர் விவகாரம், குறுவைசாகுபடி பணிகள், பயிர்க்காப்பீடு, நீர்நிலைகள் தூர்வாருதல் உள்ளிட்டவை குறித்தும் அவர் கேட்டறிந்தார்.

முன்னதாக தொழில்வளர்ச்சி முதலீட்டு ஊக்குவிப்பு கொள்கையில் அரசுடன் இந்திய தொழில்கூட்டமைப்பின் நீண்டகால கூட்டாண்மை குறித்தும் அவர் தொழில்துறையினருடன் ஆலோசனை நடத்தினார்.

இதனிடையே மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் மே மாதத்திற்கான ஆயிரம் ரூபாய் தொகை அவர்களின் வங்கி கணக்குகளில் இன்று வரவு வைக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

************

T. K. பிரபு

தமிழகத்தில் தேர்தல் நேரத்தில் த.வெ.க அறிவித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படுவதாக மாநில அமைச்சர் டாக்டர் T. K. பிரபு தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பொதுமக்களின் அடிப்படை தேவைகளை அறிந்து அவற்றை நிவர்த்தி செய்யும் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாக கூறினார்.

இம்மாவட்டத்தில் ஒருகோடியே 22 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் நெடுங்குளம் பகுதியில் சாலை மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

************

நிர்மல் குமார்

தமிழக மக்களின் நலனுக்கு எதிராக எந்த ஒரு நடவடிக்கையையும் அரசு மேற்கொள்ளாது என்று மாநில அமைச்சர் திரு.நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

மதுரையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சட்ட விரோதமாக விற்பனை செய்யப்படும் போதை பொருட்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கூறினார்.

************

கே.ஜி.அருண் ராஜ்

நாமக்கல் மாவட்டத்தில் துறைகள் வாரியாக செயல்படுத்தப்படும் அரசு திட்டங்களின் முன்னேற்றம் குறித்து மாநில அமைச்சர் திரு.கே.ஜி.அருண் ராஜ் இன்று கேட்டறிந்தார்.

மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் கண்காணிப்பாளர் தலைமையில் இன்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் பேசிய அவர், அரசின் திட்டங்களை எவ்வாறு செயல்படுத்துவது, அதற்கான வழிமுறைகள் குறித்தும் அறிவுறுத்தினார்.

************

தணிக்கை

கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் மீண்டும் வரும் ஒன்றாம் தேதி திறக்கப்பட உள்ள நிலையில் பள்ளி வாகனங்களை தணிக்கை செய்யும் பணிகள் மாநிலம் முழுவதும் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

கடலூர் மஞ்சக்குப்பம் மைதானத்தில் தனியார் பள்ளி வாகனங்களை தணிக்கை செய்யும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சிபி ஆதித்ய செந்தில்குமார் பார்வையிட்டார்.

மொத்தம் 97 பள்ளிகளை சேர்ந்த 454 வாகனங்கள் ஆய்வு செய்யப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

************

இருவரி

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் உணவு விடுதிகளில் காலாவதியான உணவுகளை விற்பனை செய்த

உணவகங்களுக்கு 9 ஆயிரம் ரூபாய் வரை அபராதம் விதித்து உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

************

மீன்பிடி தடைக்காலம்

மீன்பிடி தடைக்காலம் அமலில் உள்ள நிலையில் மயிலாடுதுறை மாவட்டத்தில் அனைத்து விசை படகுகளை மீன்வளத்துறை அதிகாரிகள் வரும் 21ஆம் தேதி ஆய்வு செய்ய உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

இம்மாவட்டத்தில் பச்சை பயறு சாகுபடி செய்த விவசாயிகளிடமிருந்து கொள்முதல் பணிகள் வரும் 9ஆம் தேதிவரை நடைபெறும் எனவும், விவசாயிகளுக்கான தொகை அவர்களது வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும் என்றும் ஆட்சித்தலைவர் திரு.ஸ்ரீகாந்த் தெரிவித்துள்ளார்.

************

நாமக்கல்

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் பிரதமரின் விவசாயிகள் கவுரவ நிதி திட்டத்தில் பயன்பெற நில உடமை ஆவணங்களை இணைக்க வேளாண் உதவி இயக்குனர் அலுவலகம் அறிவுறுத்தியுள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

வாய்ஸ்

************

கோவில்

வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில் அருள்மிகு கெங்கை அம்மன் சிரசு ஊர்வல திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

************

வானிலை

தென்மேற்கு மற்றும் மத்திய மேற்கு வங்க கடல் பகுதிகளில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி தொடர்ந்து நிலவி வருவதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

விழுப்புரம் கடலூர் மயிலாடுதுறை நாகை திருவாரூர் காரைக்கால் பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய கன மழை இன்று பெய்யக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

நாளை தேனி மயிலாடுதுறை விழுப்புரம் கடலூரில் கன மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் இம்மையம் தெரிவித்துள்ளது.

தென் தமிழக கடலோரம், மன்னார் வளைகுடா குமரிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் இன்றும் நாளையும் மீனவர்கள் இதற்குட்பட்ட பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

************

மழை தொடர்ச்சி

இதனிடையே மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம், மணல்மேடு தரங்கம்பாடி, சீர்காழி, கொள்ளிடம், புத்தூர், தைக்கால் வைதீஸ்வரன் கோவில், திருவெண்காடு, திருமுல்லைவசல், பழையார், பூம்புகார், சட்டநாதபுரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சாரல் மழை பெய்துவருவதால் இதமான சூழல் நிலவுகிறது.

செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளிலும் கன மழை பெய்ததால் சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

வாகன ஒட்டிகள் சிரமம் அடைந்தாலும், வெப்பம் தணிந்து இதமான சூழல் நிலவுவதால் விவசாயிகளும் பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்தனர்.

************

கிரிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் லக்னோவில் இன்றிரவு ஏழரை மணிக்கு சென்னை சூப்பர் கிங்ஸ் – லக்னோ சூப்பர் ஜெயன்ஸை எதிர்கொள்கிறது.

************

பேட்மிண்டன்

தாய்லாந்து ஓப்பன் பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் அரையிறுதிக்கு இந்தியாவின் ரான்கிரெட்டி, சிராகெஷட்டி இணை முன்னேறியுள்ளது.

காலிறுதியில் இந்த இணை – ஜப்பான் இணையை 21-12 21-13 என்ற நேர் செட்களில் இன்று வென்றது.

ஆடவர் ஒற்றையர் காலிறுதியில் இந்தியாவின் லக்சயா சென் – தாய்லாந்தின் Kunlavut Vitidsarn-ஐ இன்று எதிர்கொள்கிறார்.

************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது